பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 28 சனிக்கிழமை 11.05.2024 கதிர் 185

# நாட்டுக்காக எவருடன் இணையவும் தயார்

## பஸில் ராஜபக்ச தெரிவிப்பு

நாட்டிற்காக யாருடனும் இணைந்து செயற்படத் தயார் என்று பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஸ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று தேர்தல் கண்காணிப்பு மையத்தைத்திறந்துவைத்ததன் பின்னர் செய்தியாளர்களுடன் பேசியபோது அவர் இனைத் குறிப்பிட்டார். ☞2

## இது ரகசியம் அல்ல!

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலரும் தன்னுடன் வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்த்திருந்த ரணில் விக்கிரமசிங்க, அது- நடக்காமல் போனதன் பின்னர் இப்போதுதனதுவேலையைக்காட்டத் தொடங்கிவிட்டார் என்கிறார்கள் கொழும்பில் உள்ள பத்திரிகை நண்பர்கள்.

தேசியமுன்னணியின்முன்னாள் தவிசாளர் சேனக டி சில்வா நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது ஐக்கிய மக்கள் சக்தியை தாம் மீளப்பெற வழக்குப் போடுவார் என்று தெரிவித்திருப்பதை அடுத்தே அவர்கள் இப்படிக் கூறுகின்றார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியினரை ஆளும் தரப்புப் பக்கம் கொண்டுவருவதற்கு ரணில் பகிரதப் பிரயத்தனம் செய்தார். இதோ 20 பேர் வருகிறார்கள், இதோ 50 பேர் வருகின்றார்கள் என்று ஊடகங்களில் அதற்காக ஒரு பரப்புரைப் பேரே நடத்தினார்கள். சாம, தான, தண்ட, பேத வழிகளில் தொடர்ந்தும் பல முயற்சிகள் நடந்தன. ஆனால் மக்கள் சக்திப் பேர்வழிகள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. ☞2

## சு.க. தேசிய மாநாடு ஜூன் 2 கொழும்பில்

சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டை ஜூன் மாதம் 2 ஆம் திகதி நடத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகஅதன் பிரசார செயலாளர் திசர குணசேகர குறிப்பிட்டார்.

கட்சியின் தலைவர்களாகச் செயற்படுவதற்குப் பலருக்கும் நீதிமன்றம் தடை விதித்-துள்ள நிலையில் தேசிய மாநாடு பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராகச் செயற்பட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்த பின்னர், அதன் பதில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா அணியினரே இந்த அறிவிப்பை விடுத்துள்ளனனர்.

''கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் மாநாடு நடைபெறவுள்ளது. சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்திற்காக பல பிரேரணைகள் இதன்போது ☞2

## மைத்திரி மேன்முறையீடு

சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தான் செயற்படுவதற்கு விதிக் கப்பட்டுள்ள நீதிமன்றத் தடைக்கு எதிராக முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீடு செய் துள்ளார்.

கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க மைத்திரிக்கு எதிராகத் தாக்கல்செய்தவழக்கில், சுதந்திரக் கட்சித் தலைவராகச்செயற்பட மைத்திரிக்குத் தடை விதிக்கப்பட்டது.வழக்கில் கட்டாணையாக வழங் கப்பட்டுள்ளஇந்தத்தடை இரண்டுவாரங்களுக்கு ஒருதடவைநீடிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இந்தத் தடையை எதிர்த்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மைத்திரி மேன்முறையீடு செய் துள்ளார்.

சட்டத்தரணி ஜயமுதிதா ஜயசூரிய ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த மேன் ☞9

## பஸிலின் விருப்பப்படி நாடாளுமன்றை கலைத்தால் பெரும் நெருக்கடி ஏற்படும்

### சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

நாடாளுமன்றத்தினைக்கலைக்கவேண்டிய தேவை பஸில் ராஜபக்சவுக்கு உள்ள நிலையில்ஜனாதிபதி அதற்கு இணங்கினால் மீண்டும் பெரும் நெருக்கடி ஏற்படுமென்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலை மையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரத் தொடங்கிவிட்டனர்

### அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரவில்லை. ஆனால் தற்போது முதலீட்டாளர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள் என்று முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் ☞9

## ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு யாரும் உரிமைகோர முடியாது

### அதன் பொதுச் செயலர் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்தத் தனிநபரும் உரிமை கோர முடியாது என்றும் கட்சியை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருந்தே சஜித் பிரேமதாச பெற்றுக் கொண்டார் என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்திக்கும்டயானாகமகே உள்ளிட்டவர்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ☞2

## ஐக்கிய மக்கள் சக்தியை மீளப்பெற வழக்கு பாயும்

### சேனக டி சில்வா அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியை சஜித் பிரேமதாசவிடம் இருந்து மீளப்பெறும் நோக்கோடு வழக்குத் தாக்கல் செய்வோம் என்று எமது தேசிய முன்னணியின் முன்னாள் தவிசாளர் சேனக டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நானும், டயானாகமகேயும்ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை ☞8

## ரஷ்ய – உக்ரேன் போருக்குள் அகப்பபட்ட இலங்கையர் விவரம் திரட்ட தனிப் பிரிவு

### பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

ரஷ்ய - உக்ரேன் போருக்காக ஒய்வு பெற்ற இலங்கை பாதுகாப்புப் படை வீரர்களைச்சட்டவிரோத வழிகளில் ஆட்கடத்தல் செய்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு விசேட பிரிவு ஒன்றை நிறுவியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித் துள்ளது.

அதன்படி, பல்வேறு வழிகளில் ரஷ்ய - உக்ரேன் போருக்கு சம்பந்தப்பட்டுள்ள ஓய்வு பெற்ற பாதுகாப்புப்படை அங்கத்தவர்கள் தொடர்பில், அவர்கள் சென்ற திகதிகள், அதனுடன் தொடர்புடைய நபர்கள், நிறுவனங்கள், தொலைபேசி எண்கள் தொடர்பான தகவல்களை உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் சிறப்பு தொலைபேசி எண் 0112 441 146 ஊடாக பெற்றுத்தருமாறு பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண் டுள்ளார்.

மேலும் இந்த ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள் அல்லது அதற்கு ஆதரவளிக்கும் நபர்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு நபர்கள் தொடர்பான தகவல்கள் இருந்தால், மேலே குறிப்பிடப் பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அவ்விவரங்களைத் தெரிவிக் குமாறு பாதுகாப்புச் செயலாளர் பொதுமக் களிடம் கேட்டுக்கொண் டுள்ளார்.

இது இலங்கைப்பிரஜைகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படுவதனால், ☞2

## ஓ.எல். ஆங்கில வினாத்தாள் கசிந்தது குறித்து விசாரணை

கல்வி பொது தராதர சாதாரணதரபரீட்சையில் இடம்பெற்ற ஆங்கிலப் பரீட்சை வினாத்தாள் வட்ஸ்அப் ஊடாக பகிரப்பட்டமைதொடர்பில் விசாரணைகள்ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்தது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரி விக்கையில்,

ஆங்கிலப் பரீட்சை இடம்பெற்றுக் கொண் டிருந்த சந்தர்ப்பத்தில், வினாத்தாள் ☞8

## ராஜபக்சக்களின் ஒத்துழைப்பின்றி எவருமே ஆட்சியமைக்க முடியாது

### ஜோன்ஸ்டன் பெர்னான்டோ எம்.பியின் நம்பிக்கை இது

ராஜபக்சக்களின் ஒத்துழைப்புஇல்லாமல் இலங்கையில் எவரும் ஆட்சியமைக்க முடியாது என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பத்தரமுல்ல பகுதியில் உள்ள பொது ஜன பெரமுன கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ரணிலின்எதிர்காலமேதள்ளாட்டமாக இருக்கும்போது அவரை நம்பி எதற்குச்சிக்கலில்மாட்டிக்கொள்வான் என்று அவர்கள் யாரும் ஐக்கிய தேசியக்கட்சிக்குத்திரும்பவில்லை.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ரணில், கட்சி இருந் தால்தானே அங்கேயே இருப்பீர்கள், பொறுத்திருங்கள் கட்சியையே இல்லாமல் செய்துவிடுகின்றேன் என்று அடுத்த காரியத்தில் இறங்கிவிட்டார். அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தி தன்னுடையதுதான், அதனால் வழக்குப் போடுவேன் என்று சானக டி சில்வா மிரட்டுகின்றார் என்கிறார்கள் கொழும்புச் சிங்களப் பத்திரிகையாளர்கள்.

சானக வழக்குப் போட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுவிட்டால் சஜித்துக்கும் மற்றவர்களுக்கும்உடனடியாகவேறு கட்சி கிடைக்காது எனவே அவர்கள் எப்படியும்ஐக்கியதேசியக்கட்சிக்குத் திரும்பித்தானாகவேண்டும் என்பதுதான் ரணிலின் 'மாஸ்டர் பிளான்' என்கிறார்கள் அவர்கள்.

ஒருவேளைஅவர்கள்சொல்வது போன்றும்நடக்கக்கூடும். தேர்தல் நெருங்க, நெருங்க எதுவும் நடக்கலாம். திரைப்படக் உச்சக் காட்சி போன்று (கிளைமாஸ்க்) எல்லாவற்றையும் காண எம்மைத்தயார்ப்படுத்திக்கொண்டு காத்திருப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாட்டுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக் கான பணிகளைத் தேர்தல் கள் ஆணைக்குழு முன்னெடுத் துள்ளது.தேர்தலுக்கு நாங்கள் தயார் இருப்பினும் சிறந்த வேட்பாளர் ஒருவர் கிடைக்கவில்லை. எமது தரப்பில் தாமதம் இருப்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுக்களில் பல விடயங்கள் பேசப்பட்டன.ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளோம்.

இந்திய தேர்தலுக்கு பின்னர் அதாவது எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு பின்னர் தனது நிலைப்பாட்டை அறிவிப்பதாகக் குறிப்பிட்டார். வெகுவிரைவில் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

பொது ஜன பெரமுனவின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், கட்சியைப் பலப்படுத்தவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்குமுன்னுரிமை வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் குறிப்பிட்டார்கள். அதற்கமைய நாமல் ராஜபக்சவை கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமித்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகின்றனர் எனவும், பிறிதொரு தரப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் எனவும் குறிப்பிடுவது பொய்யானது.

கட்சியின் சகல உறுப்பினர் களுடன் கலந்துரையாடி அரசியல் ரீதியிலான தீர்மானங்கள் எடுக்கப் படுகிறது.கட்சியின் ஏகமனதான தீர்மானத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அறிவிப்பார்.

தேர்தல் ஒன்று இடம்பெற்றால் பொது ஜன பெரமுனவின் நிலையை விளங்கிக் கொள்ளலாம். மக்களாணைக்கு செல்வதற்கு நாங்கள் அச்சமடையவில்லை. நாட்டுக்காக எவருடனும் கைகோர்க்கவும், எத்தரப்பினரையும் விட்டு விலகுவதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம் என்றார்.

## ரஷ்ய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அனைவரும் விசேட கவனம் செலுத்தி, தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை,ரஷ்யஇராணுவத்தில் உயர் சம்பளத்துடன் தொழில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து ஓய்வுபெற்ற இராணுவத் தினர் அழைத்துச் செல்லப் பட்டு சண்டையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்று அமைச்சர் மனுஷநாணயக்காரதெரிவித்தார். சுற்றுலா வீசா ஊடாக ரஷ்யா இராணுவசேவையில்இணைந்து கொண்டுபல்வேறுநெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள சில குடும்பத் தினர் அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாற தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரஷ்யா இராணுவத்தில் உயர் சம் பளத்துடன் தொழில் பெற்றுத்த ருவதாகத் தெரிவித்து ஓய்வுபெற்ற இராணுவத்தினர் இதற்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். என்றாலும் அவர்கள் வென்கர் கூலிப்படையில் சேவைக்காகச் செல்லவேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. அவர்கள் அங்கு முன்னணி பாதுகாப்பு வலயத்தில் கடமைக்காகநிறுத்தப்பட்டுள்ளனர். அதேநேரம் அவர்களுக்கு பல மாதங்களாக அவர்களுக்குரிய சம்பளமும்வழங்காமல்இருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்த நபரையும் யுத்த சேவைக்காக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவதில்லை. அதேபோன்றுசுற்றுலாவிசாஊடாக தொழிலுக்காகவெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என எந்தளவு அறிவுறுத்தல் மேற்கொண்டாலும் இவ்வாறு தொழிலுக்குச் சென்று பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

ஆட்கடத்தல் தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டத்தின்பிரகாரம்பணியகத்துக்கு அதிகாரம் இல்லை. இந்த முறைப்பாடுகள் குற்றவிசாரணை திணைக்களத்தினாலேயே விசாரிக்கப்படுகின்றன. அதனால் எந்த சந்தர்ப்பத்திலும் சுற்றுலா விசா ஊடாக தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை மக்களை கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## சு.க. தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படஉள்ளது"என்றார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவிக்கையில், தற்போது சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் மாவட்ட மட்டத்தில் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை களுக்காகவே இவர்கள் கொழும் பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சிக்கல்களை நிவர்த்திப்பதோடு, கட்சி என்ற ரீதியில் ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

அதேநேரம், கட்சியில் கடந்த காலங்களில் மறுசீர மைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. கட்சியின் நிர்வாகசபைகூட்டத்தின் போது, மறுசீரமைப்புகள்மேற்கொள் ளப்படவேண்டும் என்று கட்சியின் பதில் தவிசாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்தார் என்று தெரிவித்தார்.

# புன்னாலைக்கட்டுவன் விபத்தில் மின்சார சபை அலுவலர் இறப்பு

## சாவுக்குக் காரணம் பொலிஸார் என்று குற்றச்சாட்டு





புன்னாலைக்கட்டுவனில் மோட்டார் சைக்கிள் மின் கம்பத்தில் மோதி ஒருவர் உயிரிழந்தார். பொலிஸாரின் சமிக்ஞைக்கு நிற்காமல்சென்றஅவரைபொலிஸார் எட்டிட உதைந்ததாலேயே அவர் விபத்துக்குள்ளானார் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சம்பவத்தில் யாழ். மாவட்டம் உரும்பிராயைச் சேர்ந்த செல்வநாயகம் பிரதீபன் (வயது 41) என்பவரே உயிரிழந்தார். இவர் கிளிநொச்சி மின்சார சபையில் பணியாற்றி வருகின்றார்.

அவரதுஇறப்புக்குப்பொலிஸாரே காரணம் என்ற குற்றச்சாட்டு எ-ழுந்ததும் அங்கு கூடிய பொதுமக்களால் பதற்றம் ஏற்பட்டது.

பிரதீபனின் மோட்டார் சைக் கிளை நிறுத்துமாறு பொலிஸார் செய்த சமிக்ஞையை மீறி அவர் பயணித்ததால் அவரைத் துரத்திச் சென்றபொலிஸார்அவரதுமோட்டார் சைக்கிளை உதைந்தனர் என்றும் அதனால் நிலைதடுமாறிய அவர் மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது.

பலாலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரே இவ்வாறு மோட்டார் சைக்கிளை உதைந் தவர்கள் என்றும் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உடற் கூறாய்வுகளுக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கட்சிக்கு உரித்துஷ்டையவர் மறைந்த மங்கள சமரவீரவே. அவருக்கு கீழாகவே டயானா கமகே உள்ளிட்டவர்கள் செயற்பட்டுள்ளனர்.

2019, 2020ஆம் ஆண்டுகளில் தான் நாம் இந்தக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டோம். எமது நாட்டில் கட்சியொன்றை ஸ்தாபிப்பதாக இருந்தால் குறைந்தது நான்கு ஆண்டுகள் தேவையாக உள்ளன. ஆகவே பதிவுசெய்யப்பட்ட கட்சியுடன் இணைந்து செல்லும் இணைப்பு முறையே காணப்பட்டது. பொது ஜன பெரமுனவும் அவ்வாறுதான் ஸ்தாபிக்கப்பட்டது

2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமான குழுவினர் எமது கட்சி சட்டபூர்வ மானது அல்லவென்று கூறி நீதிமன்றத்துக்குச் சென்றனர். அப்போது கட்சி சட்டபூர்வமானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச என்றும் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார என்றும் அங்கீகரித்து அறிவித்துள்ளது. ஆகவே இந்தக் கட்சிக்கு எவரும் உரிமை கோர முடியாது. தனிநபருக்கு இந்தக் கட்சி சொந்தமானது அல்ல என்றார்.

## பஸிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் பெரும் பான்மை பஸில் ராஜபக்சவிடத்தில் உள்ளது. அதற்காக அவர் நாடாளுமன்றத்தினைக் கலைக்க வேண்டும் என்று கோருகின்றார். நாடாளுமன்றத்தைப் பெரும் பான்மை உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் கலைப்பதாக இருந்தால்அதற்குநாம்எதிர்ப்பினை வெளியிடப்போவதில்லை.

ஆனால் பஸில் ராஜபக்சவின் தேவைக்கு ஏற்ப நாடாளுமன் றத்தினைக் கலைப்பதானது தவறானதாகும். ஜனாதிபதி பொருளாதாரத்தினை மேம்படுத் துவதாகக் கூறியே அதிகாரத்துக்கு வந்தார். தற்போது கடன் மறுசீரமைப்பைச்செய்ய வேண்டி யுள்ளது. அவ்விதமானதொரு சூழலில் நெருக்கடிகளை ஏற்படுத் தும் வகையில் தீர்மானங்களை எடுப்பதைதவிர்ப்பதேசிறந்ததாகும் என்றார்.

## ராஜபக்சக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதேர்தல்நடவடிக்கைகள் கண்காணிப்பு காரியாலய திறப்பு நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பதற்காக பொது ஜன பெரமுன பத்தரமுல்ல நெலும் மாவத்தை ஜெயந்திபுரவில் இந்த அதிநவீனதேர்தல்அலுவலகத்தை கட்சி திறந்து வைத்துள்ளது. முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச அலுவலகத்தை திறந்து வைத்தார்.

தொகுதிகள் மட்டத்திலும் ஜனா திபதி தேர்தல் செயற்பாட்டு அலுவ லகங்கள் திறக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரந்த பிரச்சாரப் பொறிமுறை தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில்ராஜபக்சஉள்ளிட்டபெருந்திர ளான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவை கீழ்மட்டத் திலிருந்து பலப்படுத்தும் புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அண்மையில்தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளோம். எமது வேட்பாளர் யார் என்பதை கட்சியின் தலைவர் மஹிந்தராஜபக்சநாட்டுமக்களுக்கு பகிரங்கப்படுத்துவார். சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம் என்றஉறுதியைநாட்டுமக்களுக்கு வழங்க முடியும்.

மக்கள்விடுதலைமுன்னணியினர் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப் படுவதற்கு முன்னரே ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிவித்து விட்டார்கள். முன்னரே அறிவிப்பதால் மட்டும் தேர்தலில் வெற்றிப் பெற முடியாது.

அறிவார்ந்தவர்கள் மக்கள் விடுதலைமுன்னணிக்குவாக்களிக் கமாட்டார்கள். வன்முறையான அரசியல் கலாசாரத்தில் இருந்து விடுப்பட்டு,ஜனநாயகஅரசியலுக்கு பிரவேசித்துள்ளோம்என்றுமக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இவர்களின் உண்மை முகம் அவர்களின் பேச்சிலேயே வெளிப்படுகிறது. அழிப்பதும்,தீ வைப்பதும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கொள்கையாகும்.

2022ஆம் ஆண்டு சம்பவத்தை தொடர்ந்து பொது ஜன பெரமுன

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜப்பான், தென்னாபிரிக்கா, சுவிஸ் தூதுவர்களைச் சந்தித்த ஜே.வி.பி.







(எம்.எச்.எம். சியாஜ்)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மஸ்கோசி ஹிடாகி, தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் செந்தில்சேல்க்மற்றும் சுவிட்ஸர்லாந்து தூதுவர் திருமதி சிறி வோல்ட் ஆகியோருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும்இடையிலானசந்திப்பு வியாழக்கிழமை பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜப்பானியத் தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான முதலாவது செயலாளர் முராதா ஷினிச்சி, தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் பிரிவுக்கான இரண்டாவது செயலாளர் ஜானெதெம்பா ஷாங்கேலா, சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான முதலாவது செயலாளர் ஜஸ்டின் பொய்லட் ஏ

ஆகியோரும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் டாக்டர் ரிஷ்வி சாலி, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சரோஜா போல்ராஜ், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இது பற்றிய தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் தீர்வுக்கான அணுகுமுறைகள் குறித்தும் தூதுக்குழு பிரதிநிதிகள் வினவினர்.

இதன்போது தேசிய மக்கள் சக்தி 'தாம் எந்தவொரு நிலையிலும் அரசியலுக்காக இனவாதத்தை பயன்படுத்தத் தயாரில்லை' என்பதை சுட்டிக்காட்டியது. சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், தேசிய பிரச்சினைக்கு தனித்து ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது எனவும், அது ஏனைய காரணிகளுடன் பிணைந்து காணப்படுவதால் தீர்வை எட்டும்போது ஒட்டுமொத்த விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியது. இந்த விவகாரங்களில் சர்வதேச சமூகம் கொண்டிருக்கும் அக்கறை குறித்து தேசிய மக்கள் சக்தி தூதுக்குழு பிரதிநிதிகளுக்கு விஷேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.(05)

## பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய செயலாளர் தமிழ் அரசு கட்சியினருடன் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச்)

பிரித்தானிய தூதரகத்தின் முதல் செயலாளர் தொம் சோப்பர் அவர்களின் தலைமையிலான குழுவினர் வியாழக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கைத்தமிழரசுக்கட்சியின்மாவட்டப்பணிமனைக்கு விஜயம் செய்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற நில ஆக்கிரமிப்பு சிக்கல்கள் ,வேலை வாய்ப்பு பிரச்சினைகள், பொருளாதார சிக்கல்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக திருகோணமலை மாவட்டத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களோடு உரையாடி அறிந்து கொண்டார்கள். இந்த கலந்துரையாடலானது ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடைபெற்றது.(05)

## கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பில் முறைப்பாடு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் நடைபெற்று வரும் நிலையில் பரீட்சை முறைகேடுகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கொழும்பு பிரதேசத்தில் உள்ள இரண்டு பரீட்சை நிலையங்களிலும், ஹசலக்க பிரதேசத்தில் உள்ள ஒரு பரீட்சை நிலையத்திலும் பரீட்சை முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் வழங்கப்பட்ட ஆங்கில வினாத்தாளினை பரீட்சை எழுதியவர்கள் கையடக்க தொலைபேசியினை பயன்படுத்திப் புகைப்படம் எடுத்து மற்றைய தரப்பினருக்கு அனுப்பி விடைகளை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிலையில், பரீட்சை நிலையங்களில் இருந்த அதிகாரிகளால் கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த பரீட்சை முறைகேடுகள் தொடர்பாக பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## க.பொ.த சாதாரணத்தர பரீட்சைக்கு தோன்றிய மாணவன் மீது தாக்குதல்

### இருவர் கைது

க.பொ.த சாதாரணத்தர பரீட்சை நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த மாணவர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் இருவர் ரத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் ரத்கம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுவர்களாவர்.

ரத்கம, தெவினிகொட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவரொருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

இவர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த போதிலும் தொடர்ந்து பரீட்சை எழுதியதாக ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ஆசிரியையின் கைகளை கட்டி வைத்து கொள்ளை

### எம்பிலிபிட்டியவில் சம்பவம்

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த சந்தேகநபரொருவர் ஆசிரியையின் கைகளை கட்டி வைத்துவிட்டு வீட்டிலிருந்த 11 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார் என எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஆசிரியையின் வீட்டின் குளியலறையின் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்துள்ள நிலையில் ஆசிரியையின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் சந்தேக நபர், ஆசிரியையின் கைகளைக் கட்டி வைத்துவிட்டு வீட்டிலிருந்த பணத்தையும் நகைகளையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த 35,000 ரூபா பணம், 6 பவுண் தங்க மாலை, பெண்டன், வளையல்கள், 2 மோதிரங்கள் மற்றும் காதணிகள் ஆகியவையும் கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈழப் போரின் எதிர்பாராத விளைவு

ரஷ்ய – உக்ரைன் போரில் இலங்கைப் படையினரும் பங்கேற்றிருக்கின்றனர் என்கிற செய்தி ஒருவழியாக உறுதிப்படுத்தப்பட்டு, ஆளும் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஓய்வுபெற்ற படையினர் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சண்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ஆளும் தரப்பினரான அமைச்சர்கள் தெரிவித்தாலும் பொருளாதார நலன்களைத் தேடியே, அதாவது அதிகப் பணம் உழைக்கும் ஆசையிலேயே அவர்கள் போர்க் களத்திற்குச் சென்றார்கள் என்பதுதான் உண்மை.

ரஷ்யா –மற்றும் உக்ரைனுக்குக் கூலிப் படைகளாக இலங்கையின்முன்னாள்படையினர்அனுப்பப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியான தொடக்கத்தில் அதனை மறுத்து வந்த ஆளும் தரப்பு இப்போது உண்மையை மறைக்கமுடியாமல்ஒப்புக்கொள்ளவேண்டியதாகிவிட்டது. இருப்பினும் எத்தனைபேர் இப்படி போர்க் களத்திற்கு அனுப்பப்பட்டார்கள், அவர்களில் எத்தனைபேர் உயிரிழந்தார்கள் என்கிற விவரம் எவையும் ஆளும் தரப்பிடம் இல்லை.

அங்கு சென்றவர்களின் விவரங்களைத் திரட்டுவதற்கான தனிப் பிரிவு ஒன்றை இப்போதுதான் பாதுகாப்பு அமைச்சு நிறுவியுள்ளது. விரைவில் அதன் மூலம் சேகரிக்கப்படும் தகவல்களைக் கொண்டே உண்மையில் எத்தனை பேர் போர் முனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர என்கிற உண்மைக்கு நெருக்கமான விவரங்கள் தெரியவரும். அதிலும் அங்கு உயிரிழந்திருக்கக்கூடியவர்களின் விவரங்களை முழுமையாகத்திரட்டமுடியுமாஎன்பதுகேள்விக்குறிதான்.

ரஷ்யா – உக்ரைன் போரில் அந்த நாட்டுப் படையினர் அதிகளவில் உயிரிழந்ததைத் தொடர்ந்து கூலிக்கு இப்படி வேறு நாட்டுப் படையினரை பணிக்கமர்த்தி வருகின்றனர். இதனை இரு நாடுகளுமே செய்திருக்கின்றனர். முறையான ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் பல நாடுகளில் இருந்தும் அங்கு தருவிக்கப்பட்டிருக்கின்றனர். எனினும் தொடரும் போர் மற்றும் தீவிரமடையும் மற்றைய நாடுகளின் தடைகள் காரணமாக, இவ்வாறு பணியாற்றச் சென்றவர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

தொடக்கத்தில் போர் முனைகளின் பின்களப் பணிகளில்ஈடுபடவே இவர்கள்சேர்த்துக்கொள்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டபோதும், பின்னர் முன்னணிப் போர்க் களங்களில் சண்டைப் பிரிவுகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். அதனால் உயிரையும் பணயம் வைத்து சம்பளமும் இல்லாத நிலையில் அவலத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ளனர் அவர்கள்.

அவர்களை மீட்டெடுப்பது என்பது இலகுவான காரியமல்ல. அவர்கள் அனைவரும் முறையான பணி நு–ழைவிசைவுப் (விஸா) பத்திரங்கள் இன்றி, சுற்றுலாவிகளுக்கான நுழைவிசைவுப் பத்திரங்களுடன்தான் சென்றுள்ளனர். சட்டபூர்வமற்ற வகையில் சென்றுள்ள இவர்களின் விவரங்களைப் பெறுவதற்குரஷ்ய, உக்ரேனியஅரசுகளின்ஒத்துழைப்பைப் பெறுவது என்பதும் பெரும் சிரமத்திற்குரியது. ஏற்கனவே தமது நாட்டில் இலங்கையர்கள் யாரும் படைகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று ரஷ்ய தூ–தரகம் அறிவித்திருந்தது.

இலங்கைப் போரில் எதிர்பாராத விளைவுகளில் ஒன்றாக இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளது. தமிழர்களுக்கு எதிரான போருக்காக ஆயிரம் ஆயிரம் இளைஞர்களைப் படையில் சேர்த்துக்கொண்ட இலங்கை அரசு, இப்போது அவர்களை மெல்லமெல்லக் கழற்றிவிட்டு வருகின்றது. அவர்களும் பொருளாதார நலன்களைத் தேடி இப்படி ஆபத்தான பணிகளுக்குள் சென்று மாட்டிக்கொள்கிறார்கள். எனவே அரசே இதற்குப் பொறுப்பேற்று அவர்களை மீட்டபதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

# வலிமையான தலைவர் எனும் கட்டுக்கதை!

**ஆர்.எஸ்.நீலகண்டன்**

2024 மக்களவைத் தேர்தல் பரப்புரைகளில், பாஜக ஒரு முக்கியமான வாதத்தை முன்வைக்கிறது. நரேந்திர மோடி ஒரு வலிமையான தலைவர். அவரால்தான் வலுவான, தீர்க்கமான கொள்கை முடிவுகளை முன்னெடுக்க முடியும். மாறாக எதிர்த் தரப்பு என்பது ஒரு பலவீனமான தேசியக் கட்சியை மையமாக வைத்து, பிராந்தியக் கட்சிகளின் ஆதரவோடு உருவாக்கப்படும் கூட்டணி. அதனால், கடின சித்தத்துடன் உறுதியான முடிவுகளை ஒருபோதும் எடுக்க முடியாது என்பதே அது.

### பாஜகவின் வாதமும் அதன் மீதான் கேள்விகளும்

இந்த வாதத்தின் மீது இரண்டு கேள்விகள் எழுகின்றன. முதல் கேள்வி - இது உண்மைதானா? உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், இது விரும்பத்தக்கதுதானா? முதலாவது கேள்வியான, யார் வலுவான தலைவர் என்பது ஓர் அரசியல் தீர்ப்பு. அரசியல் சார்புடையவர்கள், தங்கள் மனச்சாய்வை, சரி எனச் சொல்வார்கள். அத்தகைய வாதங்களுக்குத் தொலைக்காட்சி விவாத அரங்குகளைத் தாண்டி எந்த மதிப்புமில்லை.

இரண்டாவது கேள்வி மிகவும் சுவாரஸ்யமானது. நம்மை வழிநடத்திச் செல்ல அது உதவும். வலுவான தலைமை சமூகத்திற்கு எதைத் தருகிறது? மக்களாட்சிக்குத் தேவை பணிவும், ஒருமித்த கருத்துக்களை உருவாக்கும் பண்புகளும் இணைந்து செயலாற்றும் திறன். அவை தவிர்த்து யதேச்சதிகாரமாக, ஒருதலைப்பட்சமாக எடுக்கப்படும் முடிவுகளுக்கு மக்களாட்சியில் இடம் இருக்கிறதா என்ன? இடம் இருக்கிறது என்றே வைத்துக்கொண்டாலும், அவ்வகை முடிவுகள் செயல்திறன் மிக்கவைதானா?

கடந்த 10 ஆண்டுகளில், இதுபோன்ற வலிமையான அரசியல் தலைமையினால் எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பல கொள்கை முடிவுகள் - பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரிவிதிப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 370 நீக்கம், திரும்பப் பெறப்பட்ட மூன்று வேளாண் சட்டங்கள், ஓரிரவில் கொண்டுவரப்பட்ட கரோனா காலத்துப் பொது முடக்கம் - இவை அனைத்துமே பெரும் சீரழிவுகள் அல்லது குழப்பமானவை என்னும் வரையறைக்குள் வருபவை.

அவை உருவாக்கிய விளைவுகளை ஆராய்ந்து பின்னோக்கிப் பார்த்தால், இந்த முடிவுகளை இன்று எடுக்க வேண்டியிருந்தால், அவசரப்பட மாட்டேன் என்று மோடியேகூடச் சொல்லக்கூடும். அவற்றில் பலவற்றின் நடைமுறைப் பயன்பாடு என்பது அவை ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில் உருவாகவில்லை அல்லது அரசியல் நிலை மாறினால் மாறக்கூடும் என்னும் சந்தேகங்களின் அடிப்படையில், சுத்தமாக இல்லாமல் போகின்றன.

இங்கேநாம்உண்மையிலேயேகேட்கவேண்டிய கேள்வி: மக்களாட்சியில் நமக்கு வேண்டியது என்ன? ஒருமித்த கருத்துகள் உருவாக்க நேரமில்லாமல் எடுக்கப்படும் தடாலடி முடிவுகளா அல்லது நீண்ட கால அவகாசத்தில் எடுக்கப்படும், நீடித்து நிலைக்கும் தீர்வுகளா?

### வலிமையான தலைவர் - மக்களாட்சிக்கு எதிரான ஒன்று

மக்களாட்சியின் முதன்மை இலக்கு என்பது, நாம் சற்று பின்னே திரும்பிப் பார்த்தால் தெளிவாகும். அது, சமூகத்தில்மெல்லஉருவாகிவரும்ஒருமித்தத்தன்மை. ஏனெனில், மக்களாட்சியின் இலக்கு என்பது அந்த அரசியல் அமைப்பு நிலையாக இருக்க வேண்டும் என்பதுதானே ஒழிய, அவசரமாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதல்ல.

மறைமுகமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நாடாளுமன்ற நடைமுறை நம்மிடையே இருப்பதன் காரணமே, இங்கே ஒருபோதும் நாட்டின் பிரதமரை, ப்ளேட்டோ சொன்னதுபோல 'ஞானியான அரச'னாகவோ அல்லது வேறெந்த வகை அரசனாகவோ ஆக அனுமதிப்பதல்ல. கால அவகாசம் எடுத்துக்கொண்டு உருவாக்கப்படும் ஒருமித்தமுடிவுகள்என்னும்அரசியல்வழிகளைவிட, வலிமையான தலைவர்கள் நிர்வகித்த அரசியல் வழிகள்மேலானவையாகஇருந்திருந்தால், சோவியத் யூனியன் இன்றும் உயிருடன் இருந்திருக்கும்.

நவீன காலகட்டத்தில் ஞானியான அரசர்கள் அல்லது ஸ்டாலின் வழி சர்வாதிகாரிகளைவிட, நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது செயல்திறன் மிக்கதாகவும், நியாயமானதாகவும் (just) இருப்பதைக் காண்கிறோம். ஒரு சமூகமாக, நாம் ஏன் 'வலிமையான அரசன்' என்னும் கட்டுக்கதையை உடைக்க விரும்புகிறோம் என்பதை மீண்டும் இங்கே வலியுறுத்துவது மிகவும் அவசியமாகிறது. இதனால், நமக்கு அரசனையோ ஞானியையோ பிடிக்கவில்லை என்று அர்த்தமல்ல. நாம் உருவாக்க விரும்பும் சமூகத்தில் மக்கள் அனைவருமே சமம்.

அரசு என்பது நமது பிரதிநிதியாகவும், நமது தேவைகளுக்குச் செவி கொடுப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதால்தான். இந்த அமைப்பே செயல்திறன் மிக்க சமூக விளைவுகளை உருவாக்குகிறது என்பதால், மக்கள் திரளின் அறிவுடைமை நீண்ட கால நோக்கில் மேம்பட்ட சமூக விளைவுகளை உருவாக்க வல்லது எனப் புரிந்துகொள்கிறோம்.

இந்த வாதம் உள்ளுணர்வுக்கு எதிரானது எனத் தோன்றினாலும், மக்கள் திரளின் அறிவுடைமை, நிபுணர்கள், ஞானியான அரசர்கள் மற்றும் அதீத சம்பளம் பெறும் நிதி மேலாண் நிபுணர்கள் இவர்கள் அனைவரையும் ஒவ்வொரு முறையும் தோற்கடித்திருக்கிறது. இந்த அனுமானத்தின் மீதுதான் நவீனகால முதலாளித்துவத்தின் நிதிநிலை அமைப்பு கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

### உயர்ந்த சக்தி எது?

மக்கள் திரளின் அறிவுடைமை மேம்பட்டது என்னும் கருதுகோள் உண்மையில்லை என்றாலும்கூட, நாம், ஞானியான அரசர்கள் இல்லாத ஒரு சமூக அமைப்பைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்காலத்தில் இது ஒரு பெரும்பிரச்சினையாக இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினை நம் சமூக மேம்பாட்டிற்குத் தேவையான ஒரு பிரச்சினை என்றே கருத வேண்டும். இதை விலக்கிச் செல்ல உதவும் தீர்வுகள் எளிதாக அல்லது நேர்த்தியாக இல்லாமல் இருந்தாலும்கூட.

நாம் நம் மக்கள் அனைவரும் சமம் எனக் கருதுவதால், நமது அரசு என்பது நம்மை முடிந்தவரையில் உண்மையாகப் பிரதிபலிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம். அந்தப் பிரதிபலிப்பு உண்மையாக இல்லாதபட்சத்தில், நாம் நம்மைத்தான் மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர, அந்தப் பிரதிபலிப்பை அல்ல. மிக முக்கியமாக, அப்படி ஒரு மாற்றம், நமக்கு மேலே அமர்ந்திருக்கும் ஒரு ஞானியான அரசன் வழியே வர வேண்டியதில்லை. எனவே, நமது அரசியல் அமைப்பில், நாடாளுமன்றம்தான் மிக உயர்ந்த சக்தி. பிரதமர் அல்ல.

எனவேதான், நாம் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அதன் வழியே அரசைத் தேர்ந்தெடுக்கிறோம். நாம் பிரதமரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. அரசு என்பது நம்மைப் பிரதிநிதித் துவப்படுத்தும்என்னும் நல்லெண்ணத் தினால்தான் நாம் இதையெல்லாம்செய்கிறோம். வலிமையான தலைவர் என்பது, இந்த வழிக்கு முற்றிலும் எதிரான ஒரு கருதுகோள்.



தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வலிமையான தலைவர் எனும் கட்டுக்கதை!



4ம் பக்க தொடர்ச்சி...........

இந்தியாபோன்ற பன்மைத்துவமும், பெரும் மக்கள்தொகையும் நிறைந்த நாடுகளில் இந்தப் பிரச்சினை, அதன் நம்பகத்தன்மையின் எல்லையையே பல முறை சோதித்துவிடுகிறது. காலனிய நாடுகளின் எல்லைகள் அந்த நாடுகளின் இயல்பான நாகரிகத்தின் எல்லைகளாக இருப்பதில்லை. அவை அரசின், நிர்வாகத்தின் லட்சியங்களை உள்ளடக்கியதாகவும் உள்ளன என்பது கூடுதல் பிரச்சினை.

சுமார் 130 கோடி மக்கள்தொகையில் பல்வேறு இனம், மதம், மொழி, வளர்ச்சிநிலை வேறுபாடுகள், வரலாற்று மோதல்கள் என்று இந்தியாவின் கையில் பெரும் சிக்கலான பிரச்சினைகள் உள்ளன. இப்படிப் பரந்துபட்ட நாட்டின் நிர்வாக அமைப்பு என்பது ஒற்றைத்தன்மை கொண்டதாக இருக்க முடியாது.

அதன் தொடர்ச்சியாக, நிர்வாக அமைப்பில் அப்படி ஒரு ஒற்றைத்தன்மை இல்லாமல் இருப்பது நாட்டின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும். இந்த இடத்தில்தான், தன்னை வலிமையானவர்களாக முன்னிறுத்திக்கொள்ளும் தலைவர்கள் உள்ளே வருகிறார்கள். பன்மைத்துவம் உருவாக்கும் சிக்கலான பிரச்சினைகளுக்கு தங்களைத் தீர்வாக முன்வைக்கிறார்கள். திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அந்தச் சிக்கலான நிர்வாகத்தின் வேகமற்றத்தன்மை, அது உருவாக்கும் விரக்தி, இவை இரண்டும் வலிமையான தலைவன் சொல்வது நியாயம்தான் என்று எண்ண வைக்கின்றன.

## அரசு என்பது என்ன?

அடிப்படைகளை நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்வது எப்போதுமே நல்லது. அரசு என்பது அதைத் தேர்ந்தெடுத்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஒரு கருவியே தவிர, அதுவே தன்னளவில் ஒரு முற்றதிகாரம் பெற்ற அமைப்பு அல்ல. பன்மைத்துவம் கொண்ட, முக்கியமான சதவீத சிறுபான்மையினர் வாழும் பெரும் நாடுகளில், துரதிருஷ்டவசமாக அரசுகள் அப்படி மாறிவிடுகின்றன.

அதன் பின்னர், அவை மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்கும்அமைப்புகளாகவோஅல்லதுநிறைவேற்றுவதாகச் சொன்ன மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றும் அமைப்புகளாகவோ ஆவதில்லை. சாத்தானிடம் வெற்றுப் பேரம் பேசியதுபோல ஆகிவிடுகிறது.

கல்வி, சுகாதாரம் மற்றும் வேளாண் துறைகளில் இந்தியா எதிர்கொள்ளும் சிக்கலான, தீர்க்க முடியாத பிரச்சினைகள் ஒரு சிறந்த உதாரணம். உதாரணமாக கேரள மாநிலத்தின் சுகாதாரக் குறியீடுகள், உலகின் மிக வளர்ந்த நாடுகளோட ஒப்பிடத்தக்கவை. அதன் இப்போதைய தேவைவிளைவுகளை நிர்வகித்தலும் (Managing Output metrics), உயர் மருத்துவச் சேவைகளை மேம்படுத்தலுமாகும்.

உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட கங்கைச் சமவெளி மாநிலங்களின் சுகாதாரக் குறியீடுகள், பின் தங்கிய ஆப்பிரிக்க நாடுகளின் சுகாதாரக் குறியீடுகளுடன் ஒப்பிடத்தக்கவை. அம்மாநிலங்கள், தங்களது முதலீடுகளை (Managing input metrics) திறம்படச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

இதுபோன்ற பலவேற்றுமைகளை உள்ளடக்கிய நாட்டுக்கு, தில்லியில் அமர்ந்திருக்கும் ஒரு வலிமையான தலைவர், பலம் வாய்ந்த அரசியல் கட்சியின் தலைவராக இருக்கும் ஒரே காரணத்தால், ஒரே தீர்வை முன்வைக்கிறார் எனில், அவர் மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கிறார் என அர்த்தம். அப்படியான முடிவின் மூலம் எட்டப்போவதாகச் சொல்லும் இலக்குகளை அடைவது ஒருபோதும் சாத்தியம் இல்லை.

## இதற்குத் தீர்வு என்ன?

கல்வியில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேரும் மாணவ – மாணவியரின் சதவீதமானது (ஞூஷலிவிவி சிஜஷலியிதுளஜமி யூழிமிஷ்லி) தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் மிக அதிகம். இந்த மாநிலங்கள், இனிமேல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், கங்கைச் சமவெளி மாநிலங்களில் பள்ளி, கல்லூரி சேரும் மாணவ மாணவியர் சதவீதம் குறைவு.

அவர்கள், முதலில் அந்தச் சதவீதத்தை உயர்த்த வேண்டும். தங்கள் குழந்தைகளைப் பள்ளி, கல்லூரிகளுக்குக் கொண்டுவருவதில் கவனம் செலுத்த வேண்டும். தரத்தை உயர்த்துவது அடுத்த படி. இங்கே 'ஒரே நாடு, ஒரே கொள்கை' எனச் சொல்லி, ஒரே கல்விக் கொள்கையைத் தீர்வாக வைக்கும் வலிமையான தலைவர், இரு வேறுபட்ட சூழல்களில் இருக்கும் மாநிலங்களுக்கும் அநீதி இழைக்கிறார்.

இதுபோன்ற சூழல்களில், மக்கள் நலன்களுக்குச் செவிசாய்க்கும் அரசை உருவாக்கத் தேவையான நிபந்தனை இதுதான். மக்களிடம் நெருக்கமாக, அண்மையில் இருக்கும் அரசுகளைவிட, தொலைவில் இருக்கும் அரசுகள் செயல்திறனற்றவையாகவும், சரியான முடிவுகளை எடுக்க முடியாதவைகளாகும் இருக்கும். எனவே மாநில, உள்ளாட்சி அமைப்புகளைவலுப்படுத்தி, ஒன்றிய அரசின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் குறைப்பதே சரியான வழி.

**'வலிமையான பிரதமர்' அவ்வழியின் மிகப் பெரும் தடைக்கல்.**

**© த பிரின்ட்**
**நன்றி: அருஞ்சொல்**

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கல்முனை வடக்கு பிரதேச போராட்டத்தில் தொய்வு!

## மக்கள் பங்கேற்பு குறைவு



(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 45 நாளாக புதன்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.



அதன் தொடர்ச்சியாக 45 ஆவது நாளாகவும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.எனினும் கடந்த தினங்களை விட குறைந்தளவான மக்களே குறித்த போராட்டத்தில் பங்கேற்று வருவதை காண முடிகின்றது.

இவ்விடயம் குறித்து ஏற்பாட்டாளர்களும் பொதுமக்கள்



பல்வேறு பிரச்சினைகளை தற்போது எதிர்கொண்டுள்ளனர் என பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.



கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கணடித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரத போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த உண்ணாவிரதப் போராட்டம் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்னால் உண்ணாவிரத போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதில் கல்முனை சுபத்திராம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம் ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து தமது பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர். (05)



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## ராஜபக்சக்களின்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

பலவீனமடைந்து விட்டது என எதிர்தரப்பினர் கருதுகிறார்கள். அரசியல் களத்தில் பொது ஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் இன்னும் செல்வாக்கு உள்ளது. ராஜபக்சக்களின் ஒத்துழைப்புஇல்லாமல்எவருக்கும் ஆட்சியமைக்கமுடியாது-என்றார்.

## ஓ.எல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்ஸ்அப் ஊடாக பகிரப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் சிலர் மோசடியான முறையில் விடை எழுதும் நோக்கில் இவ்வாறு வினாத்தாளை பகிரப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டினூடாக ஆங்கிலப் பாட வினாத்தாளின் இரகசியத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

இதனிடையே, சாதாரண தர பரீட்சையின் சிங்கள பாட வினாத்தாளில் குறைபாடு காணப்படுவதாககூறப்படும்சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுஎன்றார்.

இதேவேளை, வவுனியாவில் பாடசாலை ஒன்றில் பரீட்சை நேரம்முடிவடைவற்கு முன்னதாக மாணவர்களிடம் இருந்து விடைத்தாள்களை பெற்றுக் கொண்டமை தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் க.பொ.த.சாதாரண பரீட்சையின் முதல் நாள் சமய பாட பரீட்சையின் போது பரீட்சை நிறைவடைவதற்கு10நிமிடங்களுக்கு முன்னர்பரீட்சைநிலையம்ஒன்றில் உள்ள மாணவர்கள் சிலரிடம் விடைத்தாள்கள் பெறப்பட்டதாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வலயக் கல்விப் பணிமனை குறித்த பரீட்சை நிலையத்தில்மேற்பார்வையாளராக கடமையாற்றிய வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோகர் ஒருவரை இடைநிறுத்தியுள்ளதுடன், குறித்த சம்பவத்தின் போது குறித்த நிலையத்தில் உதவி மேற்பார்வையாளராக கடமையாற்றியவரை மேற்பார்வையாளராக நியமித்துள்ளதுடன், புதிதாக உதவி மேற்பார்வையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது..

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டயானாகமகேவுக்குவழங்கினோம். சஜித் பிரேமதாசவை நானே தலைவராக்கினேன். டயானாகமகேபதவி விலகி பொதுச்செயலாளர் பதவியை ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு வழங்கினார். 2020.-02.-03 அன்று சேனக்க டி சில்வா ஆகிய என்னால் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன் பின்னர் சஜித் பிரேமதாச ரஞ்சித் மத்தும பண்டாரவை கட்சியின் பொதுச்செயலாளராக முன்மொழிந்தார். அதனைகட்சியின் அமைப்புச் செயலாளரான மனோஜ் வழிமொழிந்தார்.

அதற்கான கையொப்பத்தை நானும், டயானா கமகேவும் இட்டுள்ளோம். அதற்குரியஆவணங்களும் உள்ளன. இந்தப்பதவியைப் பொறுப்பேற்றபோது சஜித் பிரேமதாசவும், ரஞ்சித் மத்தும பண்டாரவும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகவே இருந்தனர்.

வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் எமது கட்சியின் அங்கத்தவர்களாக மாறாலாம் என்ற திருத்தத்தினை யாப்பில் செய்ததன் பின்னரேயே அவர்களை இணைத்துக் கொண்டோம். சஜித்தையும், மத்தும பண்டாரவையும் அழைத்து கட்சியை வழிநடத்தும் அதிகாரத்தையே நாம் வழிங்கியுள்ளோம். ஆகவே கட்சியானது சஜித்தினது சொத்து அல்ல. எனது சொத்தும் அல்ல.

நானும், டயானா கமகேயும் வாழ்நாள் உறுப்பினர்கள் ஆகவே எம்மால் கட்சியில் தொடர்ந்தும் இருக்க முடியும். இதேவேளை, சஜித்தும், மத்தும பண்டாரவும் இன்னமும்ஐக்கியதேசியக்கட்சியின் வாழ்நாள் உறுப்பினர்களாகவே உள்ளனர். அந்தக்கட்சியில் ஹர்ஷ டி சில்வா மட்டுமே ஐ.தே.கவின் உறுப்புரிமையை இராஜினாமாச் செய்த நபராக உள்ளார்.

அதேநேரம்அவர்களால்இரண்டு கட்சியில் உறுப்பினர்களாக இருக்க முடியாது.நாம்இதிலிருந்துவழக்கைத் தொடுப்போம்எமக்குத்தேவையான நபர்களை இணைத்துக்கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிப்போம். எனக்கு கட்சியின் செயற்குழுவை கூட்டும் அதிகாரம் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு மதுபானம், சிகரெட்டுகளுடன் 3 வர்த்தகர்கள் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுடன் மூன்று வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு 14 , கொழும்பு 12 மற்றும் ஹற்றன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 ,38 மற்றும் 52 வயதுடைய மூன்று வர்த்தகர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் விமான நிலையத்தின் அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முடித்துவிட்டு விமான நிலையத்தை விட்டு வெளியேற முற்படும் போது குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது இவர்கள் கொண்டுவந்த பணப்பொதிகளிலிருந்து 124 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் , 1,800 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 9 சிகரெட் பெட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட மூவரும் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ஒரு கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் இந்தியப் பெண் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் இந்தியப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதுடைய இந்தியப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வியாழக்கிழமை காலை 4.55 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, இவர் தனது பயணப் பொதியை விமான நிலையத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல முற்பட்ட போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் பயணப்பொதியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 75 கிராம் நிறையுடைய ஒரு கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் உடைகள் மற்றும் தொலைபேசி உதிரிப் பாகங்களை விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளுடன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# அனுமதி இல்லாமல் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் கைது செய்தனர்

## பசறையில் சம்பவம்

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆக்கரத்தன்ன பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலுத்கெதர, பெல்காத்தன்ன மற்றும் பல்லேகம பதியத்தலாவ பகுதியை சேர்ந்த 32, மற்றும் 44 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் வழக்கு தொடரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## மைத்திரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையீட்டு மனுவில் பிரதிவாதியாக சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொண்டகு சரச்சந்திர குறிப்பிடப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தனக்கெதிராக விதித்த தடை உத்தரவு சட்டத்திற்கு முரணானது எனவும் அதனை நீக்குவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறும் மைத்திரிபால சிறிசேனவின் மேன்முறையீட்டு மனுவில் கோரப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

முதலீடுகள் நாட்டிற்குள் வருவதற்கு, அரசியல் ஸ்திரத்தன்மை, நிதிஸ்திரத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்த உறுதிப்பாடு இருக்க வேண்டும். அதற்கிணங்க, இந்நாட்டிற்கு முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. நாட்டில் முதலீட்டுச் சூழல் மேம்பட்டுள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையில் இருந்து 200 சதவீதம் மாறியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரவில்லை. ஆனால் தற்போது முதலீட்டாளர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை புள்ளி விபரங்களுடன் என்னால் முன் வைக்க முடியும். மேலும் நிதியமைச்சினால் வழங்கப்பட்ட இலக்குகளை தாண்டிச் செல்ல முடிந்துள்ளது. இவை அனைத்தும் ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் முன்னெடுத்த வேலைத் திட்டங்களினால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மட்டும் நிதி அமைச்சின் இலக்கை நிறைவு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, 2024ஆம் ஆண்டு இறுதிக்குள், நிதியமைச்சு எமக்கு வழங்கிய இலக்கை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதாவது இந்த வருடத்தில் 03 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வர முடியும் என நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன்.

2023ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு திட்டங்கள் இந்த வருடத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த முதலீடுகள் இந்த ஆண்டில் சேர்க்கப்படவில்லை. மேலும், இந்த ஆண்டு முதலீட்டு சபை பிரதிநிதிகளை நியமித்து வெளிநாடுகளில் முதலீடுகளை ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை வர்த்தகர்களை உள்ளடக்கிய புலம்பெயர் குழுக்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளின் மூலம் பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் இருந்து வெற்றிகரமான முடிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இதற்கு மேலதிகமாக, திருகோணமலை, மாங்குளம், பரந்தன், காங்கேசந்துறை பிரதேசங்களை அண்மித்த கைத்தொழில் பேட்டைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக காங்கேசந்துறையில் உள்ள தனியார் கைத்தொழில் பேட்டையில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடா வாழ் இலங்கையர்களை உள்ளடக்கிய பலம்வாய்ந்த குழு ஒன்று இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. 500 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக, சூரிய, காற்றாலை வலுசக்தி, பசுமை ஹைட்ரஜன் ஆகிய துறைகள் நாட்டின் முக்கிய முதலீடுகளாக மாறும். இந்த நாட்டின் கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்த பிறகு, இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

பல அரசியல்வாதிகள் கூறும் வகையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டியது இந்தப் பாதையில் என்றால், இந்தப் பாதையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உருவாக்கி இருந்தால், அந்தப் பாதையில் செல்ல வேறு எவர் வேண்டும்? அவருடனேயே தொடர்ந்தும் இந்தப் பாதையில் செல்லலாம் என்றே நாம் கூறுகிறோம் என்றார்.

# யால தேசிய பூங்காவில் சேகரிக்கப்பட்ட பூச்சிகளை கடத்த முயன்றோர் கைது

## அனைவரும் இத்தாலியப் பிரஜைகள்

யால தேசிய பூங்காவில் இருந்து சேகரித்த நூற்றுக்கணக்கான உள்ளூர் பூச்சி மற்றும் தாவர இனங்களை வெளிநாட்டிற்கு கடத்த முயன்றதாகக் கூறப்படும் இரண்டு இத்தாலிய பிரஜைகள் கடகமுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை புதன்கிழமை கடகமுவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து இலங்கையிலுள்ள வண்ணத் துப்பூச்சிகள் உட்பட 285 பூச்சிகளை சேகரித்து வைத்திருந்த ஏராளமான கண்ணாடி குவளைகளை கைப்பற்றியதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காணாமல்போன 15 வயது சிறுவனை தேடி மஹரகம பொலிஸார் வேட்டை



காணாமல்போன 15 வயது சிறுவன் தொடர்பில் மஹரகமை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பன்னிபிட்டிய, கொஸ்கஹஹேன பிரதேசத்தைச் சேர்ந்த தகனமிஹிரங்க என்ற 15 வயது சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவரது தாய் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ள நிலையில் இவர் தனது தந்தை மற்றும் சகோதரியுடன் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், இவரது தந்தை கடந்த 5 ஆம் திகதி அன்று திடீரென சுகவீனமடைந்துள்ள நிலையில் சகோதரி, இந்தச் சிறுவனை வீட்டில் வைத்துவிட்டு அயல் வீட்டில் வசிக்கும் பெண் ஒருவரின் உதவியுடன் தந்தையை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர், சகோதரியும் தந்தையும் வைத்திய பரிசோதனைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிய போது சிறுவன் வீட்டில் இல்லாததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து இருவரும் மஹரகமை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு அளித்துள்ள நிலையில் மஹரகமை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# 25 லட்சம் ரூபா போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ராகம வல்பொலவில் கைது



காரில் கடத்திச் செல்லப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் ராகம வல்பொல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடமிருந்து 102 கிராம் 940 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 45 வயதுடைய சந்தேக நபர் ராகம கண்டலியத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 25 லட்சம் ரூபாவிற்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

குறித்த சந்தேக நபர் ஹெரோயின் கடத்தல் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்வு



(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை - சமுர்த்தி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சி ஒன்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனிபா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக மனிதவளப் பிரிவு உத்தியோகத்தர் ஏ.எல்.எம். நிப்றாஸ் வளவாளராகக் கலந்து கொண்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.மேலும் இக் கருத்தரங்கில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்ஹுசைன்மற்றும்சமுர்த்திமுகாமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



# கண்டி எசல பெரஹர உற்சவத்தை முன்னிட்டும் கண்டியில் யுக்திய வேலைத்திட்டம் நடத்தப்படும்

யுக்திய திட்டத்தின் கீழ் கண்டி பொலிஸ் பிரிவிக்குட்பட்ட பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் விசேடஅதிரடிப்படையினரால் குறித்தயுக்தியசோதனை நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டார நாயக்க மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதல் எசல பெரஹரா உற்சவம் முடியும் வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கண்டி மற்றும் அதனை சுற்றியுள்ள அனைத்து நகரங்களிலும் விசேட சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருடம்கண்டிபிரதேசத்தில்பதிவாகும்குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளனஎனவும்யுக்தியநடவடிக்கையின் காரணமாக போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் குறைந்தமையே இதற்கு முக்கிய காரணம் எனவும் பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கையின் கீழ் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும், போதைப்பொருள் குற்றவாளிகளுக்கான புனர்வாழ்வு நிலையம் மத்திய மாகாணத்தில் ஸ்தாபிக்கப்படுமாயின் அது காலத்துக்கு உகந்ததாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும்,கொலை,வீடுஉடைப்பு,கற்பழிப்பு,தாக்குதல், குடும்பத் தகராறு தொடர்பான முறைப்பாடுகளும் கணிசமாக குறைந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

மத்திய மாகாண ஆளுநரின் சட்டத்தரணி லலித் யு.கமகே தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்கண்டிமாவட்டஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ, கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன் உள்ளிட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மலேசியாவில் உயிரிழந்த மஸ்கெலியா இளைஞன்

மஸ்கெலியா மொடிங்ஹேம் தோட்டத்தைச் சேர்ந்த ராஜகுமார் டேவிட்சன் என்ற 24 வயது இளைஞன் பணிக்காக மலேசியா சென்றநிலையில்உயிரிழந்துள்ளார்.

மலேசியா கோலாலம்பூரில் உள்ள உணவகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி கொதிகலன் குறித்த இளைஞன் மீது விழுந்ததில் படுகாயமடைந்து கோலாலம்பூரில் உள்ளதனியார்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என விசாரணைகளை மேற்கொண்டிருந்த அந்நாட்டுபொலிஸார்இளைஞனின் குடும்பத்தினருக்குஅறிவித்துள்ளனர்.

இதையடுத்து இளைஞனின் சடலம் புதன்கிழமை இரவு 11.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்படவுள்ளது.

இந்நிலையில், இளைஞனின் தந்தையிடம் ஒப்படைக்கப்படவுள்ள சடலம் அவரின் சொந்த ஊரான மஸ்கெலியா மொட்டிங்ஹேம் தோட்டத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு இறுதி கிரிகைகள் இடம்பெறவுள்ளன என அவரது தந்தை தெரிவித்தார். (05)

# முதலைகளின் நடமாட்டம் அம்பாறையில் அதிகரிப்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன. தற்போது மாவடிப்பள்ளி பாலம் சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி , நிந்தவூர் ,மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு ,கிட்டங்கி, நாவிதன் வெளி, உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதால்வீதியால்செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9,5,4 அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கினறனர்.

மேலும் இம்மாவட்டத்தில் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சறுத்தல் தொடர்ந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள் குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மைசெய்கைஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள் கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரைக்குள்ளாகின்றது. இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும்மாடுகளேஇம்முதலைகளுக்கு இரையாகுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறதுடன் முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள் எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (05)

# பாதாள உலக குழுக்களை சேர்ந்த 3 பேர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும்,இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலக குழுக்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் மேலும் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறைபொலிஸ்குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரிகில்லகஸ்கட பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புபொலிஸ்குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 12 மற்றும் கொழும்பு 15 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 927 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# திருகோணமலை நகரில் நாய்களுக்கு கருத்தடை






(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாண கால் நடை சுகாதாரத் திணைக்களமும் திருகோணமலை நகரசபையும் இனைந்து திருகோணமலை நகரில் கட்டாக்காலியாக திரியும் நாய்களின் பொருக்கக்கை கட்டுப் படுத்தும் முகமாக நாய்களுக்கு கருத்தடை செயற்பாடு வியாழக்கிழமை திருகோணமலை நகரில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண கால் நடை சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)





# மேட்டுப்பட்டித்தெரு கிராமத்தில் யானைகள் அட்டகாசம்





முல்லைத்தீவு - விசுவமடு மேட்டுப்பட்டித்தெருகிராமத்தில்விவசாயி ஒருவரின் பயிர்களை யானைகள் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி சம்பவம் புதன்கிழமை நள்ளிரவுவேளைஇடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 03 யானைகள் தமது தோட்டத்தில் உட்புகுந்து அறுவடை செய்யும் தருவாயில் இருந்த வத்தகப்பழங்கள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பனவற்றை சேதமாக்கியுள்ளதென கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த கிராமத்தில் நீண்ட காலமாக யானைகள் தமது வாழ்வாதாரங்களை அழித்து வருகின்றன எனவும் யானை வேலிகள் போடப்படும் வேலைகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளன எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

# நச்சுப் போதைப்பொருள்களுடன் 6 பெண்கள் உட்பட 733 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப் பொருள்களுடன் 6 பெண்கள் உட்பட 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 33 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 17 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 85 கிராம் ஹெரோயின்,128 கிராம் ஐஸ்,2446 கிராம் கஞ்சா,20 கிராம் ஹெரோயின் மற்றும் 07 கிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(05)

# சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா நேற்றுக் காலமானார்

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர். எஸ் எம் எம். உமர் மௌலானா நேற்று (வெள்ளிக்கிழமை) காலமானார்.

மருதமுனையைச் சேர்ந்த பணிப்பாளர் உமர் மௌலானா திடீர் சுகவீனமுற்று கடந்த ஒரு சில தினங்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் நேற்று நண்பகல் பனிரெண்டு மணி அளவில் காலமானார்.

டாக்டர் உமர் மௌலானா 1984 இல் ஆசிரியராக நியமனம் பெற்று அதிபராக பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வந்தார்.

2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்டார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அதிபராக சீரிய சேவையாற்றியிருந்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் ஒன்பதாவது பணிப்பாளராக 20.01. 2023 சேவையில் இணைந்தார் .

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 60 வயதில் ஓய்வு பெறவிருந்தார்.



சம்மாந்துறை வலயத்தில் 15 மாதங்கள் கடமையாற்றி வந்தவேளையில் நேற்று இம் மரணம் சம்பவித்திருக்கின்றது.

சம்மாந்துறைவலய கல்வி அதிகாரிகள் அதிபர்கள் ஆசிரியர்கள் கல்விசார், கவ்வி சாரா ஊழியர்கள் மாணவர் அனைவரும் தமது அனுதாபங்களை தெரிவித்து வருகிறார்கள்.(05)

# புத்தளம் மற்றும் சிலாபம் பகுதிக்கு புதிய பதில் காதி நீதிபதி நியமனம்

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம்மற்றும்சிலாபம்பகுதிக்கான முன்னைய காதி நீதிபதியின் பதவிக் காலம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் விவாகரத்து சான்றிதழ் வழுங்குவதற்கு வழக்காலியிடம் ஐயாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் காதி நீதிபதி கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் புத்தளம் மற்றும் சிலாபம் பகுதிக்கான பதில் காதி நீதிபதியாக நீர்கொழும்பைச் சேர்ந்த அஷ்ஷேஹ் முஹாஜிர் (இஹ்ஸானி) நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக காதி நீதிமன்ற செயற்பாடுகளை துரிதமாக ஆரம்பிப்பதிலும் வழக்குகள் தொடர்பான ஆவணங்களை பொறுப்பேற்பதிலும் நடைமுறை பிரச்சினைகளும் சட்ட சிக்கல்களும் காணப்படுவதால்

பொது மக்களுக்கு துரித சேவையை வழங்குவதற்கான முன் ஏற்பாடாக எதிர்வரும் 2024.05.12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி முதல் புத்தளம் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் விஷேட மக்கள் சந்திப்பு ஒன்று எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் புத்தளம் காதி நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்குகள் பதிவு செய்தவர்கள், புதிதாக வழக்குகளை பதிவு செய்ய இருப்பவர்கள் மற்றும் தாபரிப்பு தொகைகளை பெற இருப்பவர்கள் தங்களிடம் உள்ள உரிய ஆவணங்களுடன் வருகை தந்து காதி நீதிமன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறு புத்தளம் சிலாபம் பகுதிக்கான பதில் காதி நீதிபதி அறிவித்துள்ளார்.

(05)

# நான்கு கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஜெல் கரைசலுடன் கட்டுநாயக்கவில் வர்த்தகர் கைது

நான்கு கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் கரைசலுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயிலிருந்து வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 01 கிலோ 975 கிராம் நிறையுடைய தங்க ஜெல் கரைசல் அடங்கிய 3 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# காணாமல்போன பெண்ணின் சடலம் படிதலாவவில் மீட்பு

காணாமல் போன பெண் ஒருவரின் சடலம் வனப்பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

65வயதுடையபெண்ணொருவரின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .

இவர் பேரவில, படிதலாவ பிரதேசத்தில் சேர்ந்தவர் என்பதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## யாழ்ப்பாணப் பிரதேசத்தில் விபச்சார வீடு முற்றுகை

### நால்வர் கைது



யாழ்ப்பாணம் கந்தர் மடப்பகுதியில் இயங்கி வந்த விபச்சாரவீடுஒன்றுவியாழக்கிழமை யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவி னரின் உதவியுடன் முற்றுகை இடப்பட்டுள்ளது.

குறித்த முற்றுகையில் பருத்தி த்துறை மற்றும் நீர்வேலி பிரதேசங்களைச் சேர்ந்த பெண் களும்ஆண்ஒருவர்உள்ளடங்கலாக வீட்டின் உரிமையாளரான முதியோர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக் கைகள் இடம்பெற்று வருகின்றன. (05)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் அதிரடிப்படையால் நபர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 1180 வகையான சட்டவிரோத சிகரெட்டுகளை அனுமதியின்றி இலங்கைக்குக் கொண்டுவந்த நபர் ஒருவரைவிசேடஅதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விசேட அதிரடிப்படையின் மேற்கொண்ட யுக்திய நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பலாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவராவார்.

இவரிடமிருந்து பல வகையான சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைதானவர் மேலதிக விசாரணைக் காக அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

## கடந்த 4 மாதங்களில் மட்டும் 42 துப்பாக்கிச் சூடுகள் பதிவு

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 42 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுகளில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் எந்த வித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த துப்பாக்கி சூட்டுகளில் பெரும்பாலானவை பாதாள உலக குழுக்களுக்கிடையிலான தகராற்றால் இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.05.2024இல் வெளியிடப்பெற்றது